30th July 1962]

மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்குச் சலுகைகள்

*817 கேள்வி.—திரு. எம் எஸ். செல்வராஜன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஆங்காங்குள்ள சர்க்கார் தரப்பில் விடப்படும் மீன்பிடி குத்தகைகளில் என்னென்ன சலுகைகள் காட்டப்படுகின்றன ?

THE HON. SRI N. NELLASENAPATHI SARKARAI MANRADIAR : At present there are no special concessions shown to Fishermen Co-operative Societies in the matter of leasing out of fishery rights. The Government have, however, decided to lease out the fishery rights in Inland Waters to the Fishermen Co-operative Societies during 1963 and 1964 on the average of the auction bid amounts of 1961 and 1962.

தொழிற்சாலைகளும் தோட்டக் காடுகளும் (தேசியமயமாக்குதல்)

*818 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள அன்னியர்களுக்கு சொந்தமான தொழிற்சாலைகளையும் தோட்டக் காடுகளையும் தேசியமயமாக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் நமது சர்க்காரைக் கேட்டுள்ளார்களா ?

(இ) நமது சர்க்காரின் அபிப்பிராயமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No, Sir.

(இ) Does not arise.

செமண்ட் (உற்பத்தி)

*819 கேள்வி—திரு. வை. சங்கரன் (திரு. அ. பெ தர்மலிங்கம் அவர்கள் சார்பாக) : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் செமெண்டின் அளவு எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : The production of cement in Madras State in 1961–62 was 12.34.446 tonnes

திரு வை. சங்கரன் : நமது நாட்டின் தேவை எவ்வளவு இதிலிருந்து நமது தேவைக்காக எவ்வளவு எடுத்துக்கொள்ளப்படுகிறது ? பிற ராஜ்யங்களுக்கு எவ்வளவு அனுப்பப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நமக்கு வருவதில் ஏறக்குறைய 50 சத விகிதம் நம்முடைய மாகாணத்திற்கு ஒதுக்கப்படுகிறது.

[30th July 1962

திரு. சா. கணேசன் : எந்தெந்தத் தொழிற்சாலையில் எந்தெந்த அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது என்ற விவரம் தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் அளவை 'ரஃப்'-ஆகச் சொல்லுகிறேன்:—

	டன்கள்
இந்தியா சிமெண்ட்ஸ்	4,50,000
டால்மியா சிமெண்ட்ஸ்	4,39,000
ஏ.சி.சி., மதுக்கரை	2,83,000
மெட்ருல்ஸ் சிமெண்ட்ஸ், ராஜபாளையம்	58,000

திரு. கே. டி. கோசல்ராம் : இவ்வளவு சிமெண்ட் உற்பத்தியாகியும் இன்னும் பற்றாக்குறை இருப்பதாகச் சொல்லப்படுவதால் இன்னும் எத்தனை ஃபாக்டரிகள் அமைக்க இருக்கிறார்கள்? எத்தனை மெடீரியல்ஸ் ஆகியிருக்கின்றன? எத்தனை ஃபாக்டரிகளுக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது? ஃபாக்டரிகள் அமைப்பதற்குரிய க்வாரி எங்கெல்லாம் இருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சங்கரிதுர்க்கில் இன்னும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. திண்டுக்கல்-கரூர் பகுதியில் நாள் ஒன்றுக்கு 500 டன் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலை வைப்பதற்கு லைசென்ஸ் வழங்க லெட்டர் ஆஃப் இண்டெண்ட் கொடுத்திருக்கிறோம். மேற்கொண்டு மண்டபம் பகுதியிலே வைக்கக் கூடியதற்கு லைசென்ஸ் வரவில்லை. அதைப்பற்றி சர்க்கார் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு வை. சங்கரன் : நம் மாநிலத்தில் ஆக்சுவல் தேவை எவ்வளவு? இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் அளவில் எவ்வளவு சதவித அளவுக்குப் பூர்த்தி செய்யப்படுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேவை என்பது தினம் தினம் வளர்ந்துகொண்டே போகிறது. தேவை எவ்வளவு இருக்கிறது என்று சொல்ல முடியாது. இண்டெண்ட் எவ்வளவு போட்டார்கள் என்று சொன்னேன். அதில் பாதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்றும் சொன்னேன்.

திரு ஆர். வி. சுவாமிநாதன் : மண்டபத்தில் அமைக்கப்படவிருக்கும் தொழிற்சாலைக்கு லைசென்ஸ் வரவில்லை என்று சொன்னார்கள். மண்டபம் பகுதியில் ஃபாக்டரி ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா? அப்ளிகேஷன் வந்திருக்கிறதா? எத்தனை பேர்களிடமிருந்து வந்திருக்கின்றன?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : சிமெண்டினுடைய டார்ஜெட்டை அதிகரித்தால்தான் லைசென்ஸ் கொடுப்பதாக மத்திய சர்க்காரால் சொல்லப்படுகிறது. அந்தப் பகுதியிலுள்ள சுண்ணாம்பு க்வாரியெல்லாம் ஒருவருக்கு மைனிங் லீஸில் இருக்கிறது. அவர்களுடைய அப்ளிகேஷன்தான் பரிசிலனையில் இருக்கிறது.

30th July 1962]

திரு கே. பி. பழனிசாமி : நமக்குக் கிடைக்கும் சிமெண்ட் அரசாங்கத்திற்கும், தனிப்பட்டவர்களுக்கும் எவ்வளவு என்று பிரித்துக் கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரசாங்கத்தினுடைய தேவை எவ்வளவு என்று கணக்கிட்டு அதற்கு ஒரு அலோகேஷன் கொடுக்கிருர்கள். தனிப்பட்டவர்களுக்கும் ஒரு அலோகேஷன் கொடுக்கிருர்கள்.

திரு சி. பொன்னுசாமி : இப்போது நம் தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா ஃபாக்டரிகளிலும் எந்தெந்த சிமெண்டு ஃபாக்டரியில் எந்தெந்த அளவு உற்பத்தி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு எல்லா ஃபாக்டரிகளிலும் உற்பத்தி ஆகின்றதா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : மெட்ருஸ் சிமெண்ட்ஸ் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர மற்றவைகளெல்லாம் ஃபுல் கெபாஸிடி அளவுக்கு உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன. மெட்ராஸ் சிமெண்ட்ஸும் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக உற்பத்தியை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

திரு கே. டி. கோசல்ராம் : சார், கரூரில் இரண்டு ஃபாக்டரிகள் போடக் கூடிய அளவுக்கு க்வாரி இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அதனுல் அந்தப் பகுதியில் இன்னெரு ஃபாக்டரி வைக்க லைசென்ஸ் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? சாத்தான்குளம் பகுதியில் . . .

THE HON. SRI R. VENKATARAMAN : I will answer one question at a time. If the hon. Member were to go from Karur to Sattankulam suddenly, I may not be able to jump from Karur to Sattankulam at one stroke and answer both questions at one time. (Laughter.)

கரூரைப் பொறுத்த அளவில் இரண்டு லைசென்சுகள் கொடுக்கக்கூடிய அளவுக்கு இருக்கின்றன என்று சொல்லுவது உண்மையானுல். வேறு யாருக்கும் என்னைவிட அதிக சந்தோஷம் இருக்க முடியாது. அப்படி இருக்கிறதா இல்லையா என்று ஜியலாஜிகல் சர்வே செய்து தான் பார்க்கவேண்டும்.

திரு கே. டி. கோசல்ராம் : சாத்தான்குளம் பகுதியில் பல லட்சக் கணக்கான டன் அளவுக்கு க்வாரி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. சர்க்காருக்கு ஏராளமான சிமெண்ட் தேவை இருப்பதால், சர்க்காருடைய தேவையை பூர்த்தி செய்துகொள்ள தங்களுக்கென ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : சாத்தான்குளம் பகுதியில் இருக்கக்கூடியது லோ கிரேட் என்று ஜியாலஜிகல் ரிபோர்ட் இருக்கிறது. எந்த அளவுக்கு அதைப் பயன்படுத்தலாம் என்று மேலும் பரிசிலனை செய்யவேண்டும். ராஜ்ய சர்க்கார் தங்களுக்கென ஒரு சிமெண்ட் தொழிற்சாலை வைத்துக் கொள்வது நல்லது என்று இப்போது கருதிக் கொண்டிருக்கிருர்கள்.

[30th July 1962

திரு ஆர். வி. சுவாமிநாதன் : சார், கிழக்கு ராமனுதபுரம் ஜில்லா வில் மண்டபம் பகுதியில் ஒரு தொழிற்சாலே வரவேண்டுமென்று மக்கள் விரும்புவதால், அரசாங்கம் தீவிரமாக முயற்சி செய்து அங்கே ஒரு தொழிற்சாலேயை ஏற்படுத்த மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : இந்த சர்க்காரை பொறுத்த அளவில் கனம் அங்கத்தினருக்கு எந்த விதமான சந்தேகமும் இருக்காது என்று நினைக்கிறேன். வேண்டிய முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. அகில இந்திய கண்ஜேட்டத்தில் மொத்தம் எத்தனை தேவை என்று பார்த்து டார்ஜெட்டை அதிகரித்தால் அந்தத் தொழிற்சாலே வருவதற்கு சௌகரியமாக இருக்கும்.

திரு வை. சங்கரன் : இப்போது நம் இண்டெண்டுக்கு 50 சத விகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. மாநிலத்திற்கிடையே எந்த அடிப்படையில் பங்கிடு செய்யப் படுகிறது ? என்னென்ன முறைகள் கையாளப்படுகின்றன ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : இந்தியாவில் இருக்கிற எல்லா ராஜ்யங்களுக்கும்தான் இந்த விதமான பங்கிடு. என் னென்ன இண்டெண்ட் போடுகிருர்கள், மொத்த உற்பத்தி என்ன என்று பார்த்து அந்த வீதத்தில் பங்கிடு செய்துகொடுக்கப் படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம்முடைய அரசாங்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள ஒரு தனித் தொழிற்சாலேயை அரசாங்கம் நடத்தப் போவதாகச் சொன்ன நல்ல செய்தியை வரவேற்பதோடுகூட, பஞ்சாயத்து யூனியன்கள், முனிசிபாலிடி கள் ஆகியவைகளின் தேவைகளுக்கும் கொடுக்கக் கூடிய அளவுக்கு அரசாங்கம் அதிக அளவுக்கு உற்பத்தி செய்யும் திட்டம் உண்டா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : அரசாங்கத்தின் தேவைகள் என்று சொல்லும்போது பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக் கள், முனிசிபாலிடிகள் எல்லாம் அரசாங்கத்துடன் சேர்ந்ததுதான் என்று சொல்லிக் கொள்கிறேன். தேவைக்குத் தகுந்தபடி உற்பத்தி செய்யக்கூடிய பிரச்சனே இல்லே. கிடைக்கிற லேம் ஸ்டோன் அளவுக்கு உற்பத்தி செய்யத் தயாராக இருக்கிறேம். தேவைக்கு அதிகமாக லேம்ஸ்டோன் இருந்தால் அதிகமாகவும் உற்பத்தி செய்யப்படும்.

திரு அ. ராகவ ரெட்டி : தற்போது சிமெண்ட் பர்மிட்டுகள் கொடுக்கப்படும் முறையில் கிராமங்களில் உள்ளவர்கள் தாசில் தாரிடம் சென்று பெறவேண்டியிருப்பதால் அதிகமாக செலவு ஆகிறது. ஆகையால் இத்தகைய பர்மிட்டுகளேச் சுலபமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட் மெண்ட்தான் டிஸ்ட்ரிப்யூஷன் செய்கிறது.

30th July 1962]

திரு. ரா. கு. வீரப்ப செட்டியார் : நம் ராஜ்யத்திற்கு ஒதுக்கப்படும் 50 சத விகிதம் சிமெண்ட் மாவட்டங்கள் வாரியாக ஒதுக்கப்படுகிறதா ? அல்லது தேவைக்குத் தகுந்தவாறு ஒதுக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இண்டெண்ட்ஸ் பிரகாரம் தான் ஒதுக்கப்படுகிறது. எந்தெந்த இடத்தில் தேவை என்று சொல்லுகிறார்களோ அதற்கு அப்ளிகேஷன் போட்டு, அவைகளைப் பரிசீலனை செய்து, எவ்வளவு ஒதுக்கவேண்டும் என்று நிர்ணயம் செய்கிறார்களோ அந்த அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சாத்தான்குளம், நான்குனேரி போன்ற பகுதிகளின் பொருளாதாரப் பிற்போக்குத் தன்மையைக் குறித்து, இரண்டு பகுதிகளிலும் இருக்கும் லைம்ஸ்டோனைப் பயன் படுத்தி, பரீட்சார்த்தமாகவாவது, சிறிய அளவில், 100 டன் அளவுக்கு உற்பத்தி செய்யக்கூடிய முறையில், அங்கே ஒரு சிறிய தொழிற்சாலையை நிறுவுவது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : பிற்போக்கு என்பது மாத்திரமல்லாமல் முற்போக்குப் பகுதியாக இருந்தாலும் லைம் ஸ்டோன் கிடைத்தால் அந்த இடத்தில் ஆரம்பிக்க சர்க்கார் தயாராக இருக்கிறார்கள்.

திரு கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் : சங்கரியில் ஆரம் பிக்கவிருக்கும் தொழிற்சாலைக்கு லைசென்ஸ் வழங்கி எவ்வளவு நாட்கள் ஆகின்றன? ஏன் எந்தவித வேலையும் தொடங்கப்பட வில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : இதிலே, அங்கு இருக்கக் கூடிய நிலம் வைத்திருக்கிறவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் கஷ்டம் கொடுக்கிறார்கள் என்ற செய்தி சர்க்காருக்கு வந்திருக் கிறது. சொல்லப்போனால், பொதுவாக தொழில் வைக்கவேண்டு மென்று ஜில்லாவாரியாகக் கேட்கிறார்கள். ஒரு இடத்தில் தொழிற் சாலை அமைக்க யாராவது நினைத்தால், அதற்காக நிலம் கொடுக்க வேண்மானால், இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று அதிக அளவுக்குப் பணம் வசூல் செய்யவேண்டுமென்று அந்த இடத்தில் இருக்கிறவர்கள் பார்க்கிறார்கள். அதனால் நில ஆர்ஜிதத்தில் கொஞ்சம் தடை ஏற்படுகிறது. மற்றப்படி யந்திரங்களெல்லாம் ஏற்பாடாகிவிட்டன.

திரு தோ. மு. நல்லசாமி : கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து கரூர் பகுதியில் எவ்வளவு லைம்ஸ்டோன் இருக்கிறது என்று அசெஸ் பண்ணததால் இரண்டாவது ஃபாக்டரி ஆரம்பிப் பதைப் பற்றி யோசிக்கவில்லை என்று தெரிகிறது. உடனடியாக அங்கே ஜியாலஜிகல் சர்வேக்கு ஏற்பாடு செய்து, அந்த அளவுக்கு இருக்கிறது என்று தெரிந்தால் அங்கே இன்னொரு ஃபாக்டரி அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன் ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : ஜியாலஜிகல் சர்வே செய்ய ஆழமான ட்ரில்கள் தேவையாக இருக்கின்றன. அவைகள் அகப் படாததால் பரிசீலனைகூட கொஞ்சம் தாமதமாகின்றது.

[30th July 1962

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், நில ஆர்ஜிதம் செய்வதில் கால தாமதம் ஆவதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினர்கள். இதற்காக அவசரமாகச் செய்வதற்குச் சட்டமும் இருக்கிறது. தொழில்கள் மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளின் அபிவிருத்திக் காகவும் நிலங்களை கட்டாய கொள்முதல் செய்ய முடியுமே. ஏன் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நடைமுறையில் ஒரு குழப்பம் சட்டத்தில் இருந்தது. தனியார் கம்பெனிகளுக்கு நில ஆர்ஜிதம் செய்ய முடியுமா, முடியாதா என்ற பிரச்சனை இருந்தது. இந்தப் பிரச்னைகள் தீர்ந்து நேற்று முன் தினம்தான் ஆர்டினன்ஸை பிறப்பித்திருக்கிருர்கள்.

** 820 கேள்வி.*—**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செமெண்ட் மூலம் தமிழக அரசுக்குக் கிடைக்கும் சுங்கவரியின் பங்கு எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Twenty per cent of the *net* proceeds of Union Excise Duties on Cement is allocated among the States and of this amount 6·08 per cent is allotted to Madras State. The basis of distribution follows the recommendations of the Third Finance Commission.

UNSTARRED QUESTIONS.

Madras Land Ceiling Act (Surplus lands)

1. கேள்வி.—**திரு ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நில உச்சவரம்பு சட்டத்தின்மூலம் எவ்வளவு உபரி நிலம் கிடைக்கும் ?

(இ) அப்படி கிடைக்கும் உபரி நிலத்தின் விபரம், ஜில்லா, தாலூகா வாரியாக சபைமுன் வைக்கப்படுமா ?

(உ) உபரி நிலக் கணக்கு எடுக்கவில்லை என்ருல், ஏன் ?

A—(அ) Figures are not available.

( ) Does not arise.

(உ) An estimate of the extent of surplus lands that would be available, as a result of fixation of Ceiling on land holdings, was prepared in September 1959. The Ceiling Bill was introduced in the Assembly in April 1960. Between September 1959 and April 1960, land sales on a very large scale took place. The basis for fixation of Ceiling also underwent several changes in the course of the passage of the Bill through the Legislature. In the circumstances, the estimate prepared in September 1959 is of no use now. After the Act is worked for some time, figures will be available for estimating, with some accuracy, the extent of surplus lands that may be available.